# பரத நாட்டியம்

## தரம் 7

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 7

**(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் சமூகவிஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**

**www.nie.lk**

**info@ni.lk**

பரத நாட்டியம்
ஆசிரியர் கைந்நூல்
தரம் - 7
பாடத்திட்டம் - 2016

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

முதற் பதிப்பு : 2016
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***அச்சுப் பதிப்பு:***

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பெற்றது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்பெறும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வழியாக இது அறிமுகப்படுத்தப்பெற்றது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்பட உள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பெற்று, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பெற்ற பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பெற்ற பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பெற்ற பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

ஆலோசனையும் வழிகாட்டலும் : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

பாட நிபுணத்துவ ஆலோசனை: திரு. சுதத் சமரசிங்ஹ
பணிப்பாளர் - அழகியற்துறை

பாட இணைப்பாக்கம்: திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்
செயற்றிட்ட தலைவர்
அழகியற் கல்வித்துறை

எழுத்தாளர் குழு:
(உள்வாரி) திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்
செயற்றிட்ட தலைவர்
அழகியற் கல்வித்துறை

(வெளிவாரி) திருமதி தயானந்தி விமலச்சந்திரன்
ஆசிரிய ஆலோசகர்
மேல் மாகாணம்.

திருமதி பாரதி சிவயோகநாதன்
ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு 02.

திருமதி சுபாசினி சர்வேஸ்வரன்
ஆசிரியை
கொ/கணபதி இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு.

மொழி மேற்பார்வை: திரு.து.இராஜேந்திரம்
ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்
திறந்த பல்கலைக் கழகம்.

கணனி கோர்ப்பும் வடிவமைப்பும்: செல்வி க.தாட்ஷாயனி

அட்டைப்பட வடிவமைப்பு: திரு. ரவீந்ர தேநுவர

## ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்.

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 6 இற்கான பரதநாட்டிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமாக நடாத்துவதற்கு துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் கைநூல் உங்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனை பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேர முகாமை செய்தல்.

❖ 5 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறைத் தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்த தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

❖ தாமே ஒரு செயற்பாடுகளை செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனமெடுப்பது பயனுடையதாகும்.
  ➢ அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப் பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரை பாடத்தின் பால் ஈர்த்தல். முன்னநிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள் ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்த பாடத்தை நிறைவு செய்தல்.
  ➢ இந்த ஆசிரியர் கைநூல் ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1, 2.1, 3.1.1, 3.2.1 4.1, 4.2, 4.4.1, 4.4.2, 4.4.3, 5.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.2, 2.2, 3.1.2, 3.2.2, 3.4, 4.4.4, 4.4.5, 4.5, 4.6.1, 5.2 | செயற்பாட்டு இலக்கம் : 1.3, 2.3, 3.1.3, 3.2.3, 3.3, 4.4.3, 4.6.2, 4.7, 5.3.1, 5.3.2 |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர்களின் இரசனையைத் தூண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு நிகழ்வு ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக் கூடாது.

- அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது பாத அசைவுகளில் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடாத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாக பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- அதன் பின்பு தான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்கப்பட வேண்டும்.

- எக் காரணம் கொண்டும் ஆசிரியர் கைந்நூலில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்பு அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- அத்துடன் ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்கள் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.
  **உ+ம் தா தெய் தெய்த அடவு**

## உள்ளுறையாக

**பக்கம்**


பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii

பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv

கலைத்திட்டக்குழு vi

அறிமுகம் vii

ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

- தேசிய இலக்குகள் x
- அடிப்படைத் தேர்ச்சிகள் xii
- பாடத் தேர்ச்சிகள் xiii

பாடத்திட்டம் xv

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆவோசனைகள்

தவணை I 01- 15

தவணை II 16 - 32

தவணை III 33- 43

# அறிமுகம்

ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் 6ஆம் தரத்தில் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கவின் கலைகள் ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக 6ஆம் தரத்தில் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றை தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தற்கால கல்வி முறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்து புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரைகண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றை தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது இன்றைய எதிர்கால சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003)

## பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.

# முதலாம் தவணை

தேர்ச்சி 1.0 : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.1 : இயற்கைச் சூழலை மையமாகக் கொண்ட பறவையினங்களை இரசித்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

செயற்பாடு 1.1 : பறவையினங்களான மயில், வாத்து, தாரா, கருடன், சோடிப் பறவைகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை அவதானித்து நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

பாடவேளைகள் : 02

தர உள்ளீடுகள் : பறவையினங்கள், மயில், வாத்து, தாரா, கருடன், சோடிப் பறவைகள் ஆகியவற்றின் செயற்பாடுகள் அடங்கிய காணொளி இறுவட்டுக்கள்.

கற்றற் பேறுகள் :

- பறவைகளின் செயற்பாடுகளை அவதானிப்பதில் நாட்ட முறுவார்.
- பறவைகளின் அசைவுகளைப் பாவைனை செய்ய தூண்டப் பெறுவார்.
- பறவைகளின் செயற்பாடுகளை நயந்து வெளிப்படுத்துவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

♦ இயற்கைச் சூழலிற் காணப்படும் பறவையினங்கள் சம்பந்தமான காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.

♦ பார்வையிட்ட பறவையினங்களின் செயற்பாடுகளை மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்கள் இரசித்தவற்றை வெளிக்கொணர்தல்.
  - மயிலின் செயற்பாடுகள்.
  - வாத்தின் செயற்பாடுகள்.
  - தாராவின் செயற்பாடுகள்.
  - கருடனின் செயற்பாடுகள்.
  - சோடிப்பறவைகளின் செயற்பாடுகள்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- இயற்கைச் சூழலில் உள்ள பறவையினங்களின் செயற்பாடுகளை அவதானித்துக் கூறுவார்.
- அச் செயற்பாடுகளில் உள்ள நயத்தலுக்குரிய அம்சங்களை எடுத்துரைப்பார்.
- பறவையினங்களின் செயல்களை பாவனை செய்யும் ஆவலை விவரிப்பார்.
- நடனத்தின வழியாய் பறவைகளைப் போலச் செய்யும் திறனை வெளிப்படுத்துவார்.
- பறவையினங்களின் செயற்பாடுகளை நயந்துரைப்பார்.

தேர்ச்சி 2.0 : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறு வகையான பாடல்களையும் கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 2.1 : இயற்கைச் சூழலை மையமாகக் கொண்ட பறவையினங்களை இரசித்துப் பாவனை செய்து காட்டுவார்.

செயற்பாடு 2.1 : பறவையினங்களாகிய மயில், புறா, அன்னம், கருடன் ஆகியவற்றைப் போன்று பாவனை செய்து காட்டுவோம்.

பாடவேளைகள் : 02

தரஉள்ளீடுகள் : ஏற்கனவே கற்ற (1.1) அலகிற் பார்வையிட்ட காணொளி இறுவட்டு.

கற்றற்பேறுகள் :

- ♦ மயில், புறா, அன்னம், கருடன், சோடிப் பறவைகள் ஆகியவற்றைப் போற் பாவனை செய்து காட்டுவார்.
- ♦ சோடிப் பறவைகள் கதை பேசுமாற்றை அபிநயிப்பார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ ஏற்கனவே பார்வையிட்ட பறவைகளின் அசைவுகள், செயற்பாடுகள் அடங்கிய காணொளி இறுவட்டினை மீண்டும் பார்வையிடச் செய்தல்.

- ♦ ஏற்கனவே நயந்து வெளிப்படுத்திய பறவையினங்களின் செயற்பாடுகளையும் நினைவு கூர்தல்.

- ♦ பார்வையிட்ட, நினைவு கூர்ந்த விடயங்களைக் கொண்டு கீழ்வரும் விடயங்களை அபிநயிக்க வழிப்படுத்தல்.

    - மயில் ஆடுதல்.
    - புறா, அன்னம் ஆகியவற்றின் அசைவுகள்.
    - பாவிக்கப்படும் முத்திரைகள்.
    - கழுத்தின் அசைவுகள்.
    - சோடிப் பறவைகளின் அசைவுகள்.

- ♦ மாணவர்களைத் தொகைக் கேற்பக் குழுக்களாகப் பிரித்து அசைவுகளைப் பாவனை செய்யும் படி கூறுதல்.

- ♦ மாணவர்கள் குழுக்களாக அபிநயிக்கும் போது ஆசிரியர் அதனை அவதானித்து வழிப்படுத்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பறவைகளின் அசைவுகள் செயற்பாடுகளை பாவனை செய்வார்.
- மயிலின் நளினமான அசைவுகளை ஆடிக்காட்டுவார்.
- சோடிப்பறவைகளின் அன்னியோன்யத்தைச் செய்து காட்டுவார்.
- புறாவின் கழுத்தசைவை மேற்கொள்வார்.
- கருடனைப் போல பெரிய இறக்கைகளை விரித்துப் பறந்து காட்டுவார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.1 : ஹஸ்த விநியோகங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.1.1 : பதாகம், திரிபதாகம் ஆகிய விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம்.

பாடவேளைகள் : 03

தர உள்ளீடுகள் : பதாகம், திரிபதாகம் விநியோகம் அடங்கிய அட்டை.

கற்றற் பேறுகள் :

- ♦ பதாக விநியோகத்தை அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ திரிபதாக விநியோகத்தை அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ அவ்விரு விநியோகங்களுக்கும் பொருள் கூறுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ ஏற்கனவே மாணவர் கற்ற ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகளை நினைவு கூருதல்.
- ♦ பதாக விநியோகத்தினை ஆசிரியர் உச்சரிப்புடன் அபிநயித்துக் காட்டுதலும், மாணவர்கள் அவதானித்து பின் பற்றுதலும்.
- ♦ திரிபதாக விநியோகத்தினை ஆசிரியர் உச்சரிப்புடன் அபிநயித்துக் காட்டுதலும், மாணவர்கள் அவதானித்து பின்பற்றுதலும்.
- ♦ மாணவர்களைக் குழுவாக உச்சரிப்புடன் அபிநயிக்கச் செய்தல்.
- ♦ மாணவர்களைத் தனியாக உச்சரிப்புடன் அபிநயிக்கச் செய்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- விநியோகங்கள் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவார்.
- பதாக விநியோகத்தினை உச்சரிப்புடன் அபிநயிப்பார்.
- திரிபதாக விநியோகத்தினை உச்சரிப்புடன் அபிநயிப்பார்.
- விநியோகங்களின் பொருள் கூறுவார்.
- தகுந்த பாவத்தினைப் பொருளுக்கேற்ப அபிநயிப்பார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.2 : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.2.1 : 5-8 வரையுள்ள நாட்டடவுகளை அபிநயித்துக் காட்டுவோம்.

பாடவேளைகள் : 07

தரஉள்ளீடுகள் : தட்டுக்கழி, தட்டுப்பலகை, தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை.

கற்றற்பேறுகள் : 5-8 வரையுள்ள நாட்டடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ஏற்கனவே தரம் 6இற் கற்ற நாட்டடவுகள் 1-4 இனை நினைவு கூர்ந்து 4வது நாட்டடவினை ஆடுதல்.
- அடவுகள் 5-8 இற்குப் பாவிக்கப்படும் முத்திரைகள், பாதநிலைகள், அங்க நிலைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- 5வது அடவின் காற் செய்கையை ஆசிரியர் அபிநயித்துக் காட்டுவதுடன் மாணவர் அதனை அவதானித்து அபிநயித்தல்.
- தொடர்ந்து கைப்பயிற்சியைச் செய்தல்.
- முதலில் விளம்ப, மத்திம காலங்களிலும் பின்னர் துரித காலத்திலும் பயிற்சி அளித்தல்.
- 5வது நாட்டடவின் கற்பித்தற் செயலொழுங்கின் பிரகாரம் அடவுகள் 6-8 இனையும் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு அடவினை ஒவ்வொரு குழு அபிநயிக்க மறுகுழு கொலுப்பித்தலும் கருத்துக் கூறலும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாட்டடவுகள் 5-8 வரையான அடவுகளிற்குப் பயன்படுத்தும்.
- முத்திரைகளை அபிநயித்துக் காட்டுவார்.
- பயன்படுத்தும் பாதநிலைகளைச் செய்து காட்டுவார்.
- 5-8 வரையான நாட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்பார்.
- அடவு 5இற்கும் 6 இற்கும் இடையிலுள்ள கால் வேறுபாட்டைச் செய்து காட்டுவார்.
- அடவு 8 ஏனையவற்றிலிருந்து வேறுபடும் செய்கையைச் செய்து காட்டுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.1 : ஹஸ்த விநியோகங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 4.1 : பதாகம் - சுகதுண்டம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களின் ஸ்லோகங்களையும் அவற்றின் கருத்தினையும் எழுதுவோம்.

பாடவேளைகள் : 08

தரஉள்ளீடுகள் : பதாகம் - சுகதுண்டம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களின் ஸ்லோகங்கள், கருத்து எழுதப்பட்ட அட்டைகள்.

கற்றற்பேறுகள் :

- ♦ பதாகம் - சுகதுண்டம் வரையிலான முத்திரைகளின் விநியோகங்களின் ஸ்லோகங்களை எழுதுவார்.
- ♦ அவற்றின் கருத்தினை எழுதுவார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ பதாக முத்திரை விநியோகத்தின் ஸ்லோகம், கருத்து எழுதப்பட்ட அட்டையினைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ அட்டையிலுள்ள ஸ்லோகத்தினை அடிப்படையாகக் கொண்டு ஸ்லோகத்தினையும் கருத்தினையும் எழுதுவதற்கு வழிப்படுத்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பதாகம் - சுகதுண்டம் வரையிலான முத்திரை விநியோகங்பளையும் அவற்றின் கருத்துக்களையும் எழுதுவார்.
- எழுதியவற்றை வாசித்துக் காட்டுவார்.
- கருத்துக்களைத் தொடர்பு படுத்துவார்.
- மனனம் செய்து கூறுவார்.
- எழுதியவற்றில் பதாகம், திரிபதாகம் ஆகியவற்றின் விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.2 : பரத நாட்டிய நூல்களின் பெயர்சளைக் குறிப்பிடுவார்.

செயற்பாடு 4.2.1 : நாட்டிய நூல்களின் பெயர்களையும், அவற்றின் நூலாசிரியர்களையும் அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 02

தர உள்ளீடுகள் : விடய உள்ளடக்க அட்டை.

கற்றற் பேறுகள்

- ♦ பரத நாட்டிய நூல்கள் பற்றிக் கூறுவார்.
- ♦ அவற்றின் நூலாசிரியர்களைக் குறிப்பிடுவார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ பரதநாட்டிய நூல்கள் - நூலாசிரியர்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ இங்கையிலும், இந்தியாவிலும் வெளியிடப்பட்ட நூல்கள்.
- ♦ அவற்றின் ஆசிரியர்கள்
- ♦ விடய உள்ளடக்க அட்டையை மாணவருக்கு வழங்குதல்.
- ♦ மாணவர்கள் எழுதுவதற்கு நேரம் ஒதுக்குதல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பரத நாட்டிய நூல்களையும் நூலாசிரியர்களையும் குறிப்பிடுவார்.
- நூல்களின் உள்ளடக்கங்களைக் கூறுவார்.
- இந்திய நூல்களைக் கூறுவார்.
- காலத்தால முந்திய நூல்களையும், தற்கால நூல்களையும் வேறுபடுத்திக் கூறுவார்.
- இலங்கை நூல்களைக் கூறுவார்.

**குறிப்பு** : கிடைக்கக்கூடிய புத்தகங்களின் விடய உள்ளடக்கங்களை எழுதிவருமாறு மாணவர்களுக்கு ஒரு ஒப்படையை வழங்கவும்.

**விடய உள்ளடக்க அட்டை**

| **நூல்களின் பெயர்** | **ஆசிரியரின் பெயர்** |
|---|---|
| பரத சாஸ்திரம் | பரத முனிவர் |
| அபிநய தர்ப்பணம் | நந்திகேஸ்வரர் |
| பரதசங்கிரகம் | அறம் வளர்த்தனார் |
| மகாபரதசூடாமணி | சோமநாதர் |
| பரத சேனாதிபதியம் | ஆதிவாயிலார் |
| பரத கலைச்சித்திரம் | டி.கே.ராஜலஷ்மி |

| | |
|---|---|
| | டி.ஆர். அருணாசலம் |
| ஸ்வபோத நவநீதம் | மாங்குடிதுரைராஜ ஐயர் |
| பரத நாட்டியம் | த. பாலசரஸ்வதி |
| அபிநயசாரசம்புடம் | சேட்டலூர் நாராயணஐயங்கார் |
| அபிநய நவநீதம் | சேட்டலூர் நாராயணஐயங்கார் |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| இந்திய கிராமிய நடனங்கள் | கபிலவத்ஸ்ல்யான் |
| நாட்டியக்கலை | வே. ராகவன் |
| பரத நாட்டியம் | வே. ராகவன் |
| தெய்வீக ஆடற்கலை | வழுவூர் இராமையாபிள்ளை |
| பரதக்கலைக் கோட்பாடு | கலாநிதி. பத்மா. சுப்பிரமணியம். |
| பரதநாட்டியக்கலை | கலைமாமணிசரஸ்வதி |
| பரதக்கலை | வி.சிவசாமி |
| தென்னாசியக்கலை வடிவங்களின் நாட்டிய சாஸ்திர மரபு | வி.சிவசாமி |
| நடனசாரம் | லீலாம்பிகை செல்வராஜா |
| ஆடற்கலை | லீலாம்பிகை செல்வராஜா |
| நாட்டியக்கலை<br>அரங்கவியலும் ஆடற்கலையும்.<br>அருங்கலை ஆடற்கலை<br>நுண்கலை நடனக்கலை<br>இலங்கையின் சாஸ்திரிய நாட்டியங்கள்<br>பைங்கலை<br>Bharathanatyam Basic study<br>Bharathanatyam Divine dance | சுபாசினி பத்மநாதன் |
| தமிழ் வளர்த்த ஆடற்கலைகள் | கார்த்திகா.கணேசர் |
| காலம்தோறும் நாட்டியக்கலை | கார்த்திகா.கணேசர் |
| சங்கீதரத்னாகரம் | சாரங்கதேவர் |
| சங்கீத தர்ப்பணம் | சதுரதாமோதார் |
| சங்கீத சாராம்ருதம் | தஞ்சைதுளஜா மகாராஜா |
| பரதார்ணவம் | நந்திகேஸ்வரர். |

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.4 : பரந நாட்டியம், கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்வார்.

செயற்பாடு 4.4.1 : நடனத்தின் உட்பிரிவுகளை அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 01

தர உள்ளீடுகள் : விடய உள்ளடக்க அட்டை

கற்றற் பேறுகள் : நடனத்தின் உட்பிரிவுகள் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பதை உதாரணத்துடன் விவரிப்பார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ நடனத்தின் உட்பிரிவுகள் மூன்று வகைப்படும் எனக் கூறிப் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கத்தக்கதாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல். அவை
    - நிருத்தம்.
    - நிருத்தியம்.
    - நாட்டியம் 3 வகைகளாகும்.
- ♦ ஒவ்வொன்றினையும் வரைவிலக்கணப்படுத்துதல்.
- ♦ விளக்கமளிக்கும் போது மாணவர் குறிப்பு எடுக்க வழிப்படுத்தல

**நாட்டியம்.**

- ♦ இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் ஒருங்கிணைந்த கலை நாட்டியம்.
- ♦ நடனத்திற்குச் சிறந்த ரஸஅபிநயம் பாவஅபிநயம் இவைகளைத் தத்ரூபமாக நடித்துக் காட்டுவதே நாட்டியம் ஆகும்.
- ♦ நாட்டிய சாஸ்திரத்திற் கூறியபடி கரணம், அங்கஹாரம்,ஜதி, யதி போன்ற முறைகளைக் கொண்டு, பல பாத்திரங்கள் ஏதேனும் ஒரு கதையைச் சுவைபட இசையுடன் எழில் மிக அபிநயித்துக் காட்டுதல் நாட்டியமாகும்.
- ♦ கதை தழுவி வரும் ஆடலைப் பண்டையோர் கூத்து என்றனர்.
- ♦ நடத்தல் என்னும் சொல்லிலிருந்து சிறப்பான கலைப்பொலிவுள்ள நடை என்னும் பொருளில் நாட்டியம் எனும் சொல் தோன்றியிருக்கலாம்.
- ♦ நாட்டியம், நாடகம் தொடக்கம் ஈஹ மிருகம் முதலாகப் பத்து வகைப்படும்.

- ♦ இராமாயண, மகாபாரதக் கதைகளிலிருந்து நாடகக் கருவைத் தேர்ந்தெடுப்பது, உண்மைச் சம்பவங்களிலிருந்த தேர்வது, ஒரு பாத்திரம் மட்டும் உள்ளது, ஹாஸ்ய ரஸம் மேலோங்கி இருப்பது என இப்பத்து வகைகள் வெவ்வேறு கதாபாத்திரங்களின் குணாதிசயங்களைப் பிரதிபலிக்கும்.

- ♦ நாடகத்தை ரூபம் என்றும் அழைப்பதுண்டு. இதன் பொருள் வடிவம் ஆகும்.

**நிருத்தம்.**

- ♦ தாளம், லயம் ஆகியவற்றிற்கு ஏற்ப இராக ஸ்வரங்களுக்கோ, மிருதங்க ஜதிகளுக்கோ ஏற்றவாறு கைகால்களின் இணைந்த அபிநயம். அதாவது அடவுகளைப் பிரயோகம் செய்தல் நிருத்தம் ஆகும்.
- ♦ இதிற் கருத்து வெளிப்படுவதில்லை.
  உதாரணம் : அலாரிப்பு, ஜதீஸ்வரம்.

**நிருத்தியம்.**

- ♦ ஒரு பாடலின் கருத்துப் புலப்படும்படி உறுப்புகளால் அபிநயம் செய்து நடனம் புரிதல் நிருத்தியமாகும். தாளத்தினைப் பாதங்களும் பாவத்தினைக் கண்களும் மற்றும் கை முத்திரைகளும் வெளிக்கொணரும்.
  உதாரணம் : பதம், கீர்த்தனை

கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என்பவற்றை நடனத்தின் உட்பிரிவுகள் எனக் குறிப்பிடுவார்.
- ஒவ்வொன்றின் விரிவான விளக்கத்தைக் குறிப்பிடுவர்.
- நாட்டியம் என்ற சொல் எவ்வாறு தோன்றியதெனக் குறிப்பிடுவார்.
- நாட்டியத்தின் வகைகளைக் குறிப்பிடுவார்.
- ஒவ்வொன்றின் உதாரணங்களையும் குறிப்பிடுவார்.

உசாத்துணை நூல்கள் :

நாட்டிய சாஸ்திரம்

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.4 : பரத நாட்டியம், கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார்.

செயற்பாடு 4.4.2 : நவரஸம் பற்றி அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 01

தரஉள்ளீடுகள் : விடய உள்ளடக்க அட்டை.

கற்றற் பேறுகள் : நவரஸங்களைக் குறிப்பிடுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ நவரஸம் தொடர்பான விளக்கத்தை மாணவருக்கு வழங்குதல்.
- ♦ சாதாரண வாழ்க்கையில் நவரஸங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ கேட்டறிந்த விடயங்களுடன் பின்வரும் விடயங்களையும் வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுதல்.
- ♦ ரஸம் என்பது சுவைக்கப்படுவது எனப் பொருள்படும்.
- ♦ பல்வகைப் பொருட்களின் சேர்க்கையால் உணவு சுவை தருவதாக இருப்பது போல பல்வகை அபிநயங்களின் சேர்க்கையால் காண்போரின் மனதில் சுவை ஏற்படுகிறது.
- ♦ 9 வகையான சுவைளும் நவரஸம் எனப்படும்.
- ♦ சிருங்காரம், பீபத்ஸம், பயானகம், அற்புதம். ஹாஸ்யம், வீரம், ரௌத்திரம், சாந்தம் கருணை இவை ஒன்பதும் நவரஸங்களாகும்.
- ♦ கலந்துரையாடும் போது குறிப்பெடுக்கும் படி வழிப்படுத்தல்.
- ♦ விடுபட்ட விடயங்களை விடய உள்ளடக்க அட்டையினைப் பார்வையிட்டுச் சரிசெய்வதற்கு வழிப்படுத்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும். :

- ரஸம் என்பதன் விளக்கத்தினைக் குறிப்பிடுவார்.
- 9 ரஸங்களையும் கூறுவார்.
- குறிப்பெடுத்த விடயங்களை வாசித்துக் காட்டுவார்.
- ரசங்களைச் சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்துவார்.
- ரஸங்களை அபிநயித்துக் காட்டுவார்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் 4.4 | : | பரத நாட்டியம் கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார். |
| செயற்பாடு 4.4.3 | : | இசைக் குறிபீடுகளைக் கற்றுக் கொள்வோம். |
| பாடவேளைகள் | : | 01 |
| தரஉள்ளீடுகள் | : | விடய உள்ளடக்க அட்டை |
| கற்றற் பேறுகள் | : | இசைக் குறியீடுகளை அறிந்து கொள்வார். |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- நடன, இசை உருப்படிகளை எழுதும் போது பயன்படுத்தப்படவேண்டிய குறியீடுகளே இசைக் குறியீடுகள் எனக் கூறிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

| | |
|---|---|
| ஒரு ஆவர்த்தன முடிவு | // |
| அரை வர்த்தன முடிவு | / |
| நெடில்ஸ்வரம் | ஸா |
| குறில்ஸ்வரம் | ஸ |
| அந்நியஸ்வரம் | * |
| கமகம் | ~~~ |
| லகு | I |
| துருதம் | 0 |
| அனுதுருதம் | ∪ |
| கீழ்ஸ்தாயி (மந்தரஸ்தாயி) | ஸ̣ |
| மத்திம ஸ்தாயி | ஸ |
| மேல்ஸ்தாயி (தாரஸ்தாயி) | ஸ̇ |
| அதிதாரஸ்தாயி | ஸ̈ |
| தகிட | 3 மாத்திரைகள் |
| தகதிமி | 4 மாத்திரைகள் |
| , | 1 மாத்திரை |
| ,, | 2 மாத்திரைகள் |
| $\overline{\overline{\text{தகதிமி}}}$ | 2 மாத்திரைகள் |
| $\overline{\text{தகதிமி}}$ | 1 மாத்திரைகள் |

தகதிமி - 4 மாத்திரைகள் கொண்டது. மேலே ஒரு கோடு இடப்படும் போது அம் மாத்திரையின் அரைவாசியை எடுத்துக்கொள்கிறது.

தகதிமி - இதன் மேல் இரண்டு கோடுகள் இடப்படும் போது அம்மாத்திரையின் கால் வாசி 1/4 எடுத்துக் கொள்கிறது.

குறிப்பு : இக்கணக்குகள் மாணவருக்குத் தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- இசைக் குறியீடுகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுவார்.
- இசைக் குறியீடுகளைக் குறிப்பிடுவார்.
- மாத்திரைக் கணக்குகளைக் குறிப்பிடுவார்.
- எவ்வாறு அரை மாத்திரை, கால்மாத்திரை ஏற்படுகிறது என்பதைக் குறிப்பிடுவார்.
- குறியீடுகளை அடவுகளில் கையாளுவார்.

தேர்ச்சி 5.0 : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 5.1 : புராண வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

செயற்பாடு 5.1.1 : புராண வரலாற்றினை ஆராய்ந்து அறிவோம்.

பாடவேளைகள் : 02

தரஉள்ளீடுகள் : விடய உள்ளடக்க அட்டை

கற்றற் பேறுகள் :

- ♦ நான்கு வேதங்களையும் கூறுவார்.
- ♦ நான்கு வேதங்களிலுமிருந்து தொகுக்கப்பட்ட வேதமே நாட்டிய வேதம் என்பதைக் குறிப்பிடுவார்.
- ♦ நாட்டிய வேதம் பிரம்மாவால் அருளப்பட்டது என்பதைக் குறிப்பிடுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ நாட்டியக்கலை தெய்வீகக் கலை எனக் கொள்ளப்படுவதற்கான காரணத்தை மாணவர்களுடன் கலந்துரையாடல்.

- ♦ கலந்துரையாடப்பட்ட விடயங்களுடன் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- ♦ **நாட்டியக் கலையின் தோற்றம்.**

    - தேவர்கள் தமது பொழுது போக்கிற்காகவும் மகிழ்ச்சிக்குமாகவும் ஒன்றை ஆக்கித்தருமாறு பிரம்மாவை வேண்டியமை.

    - நான்கு வேதங்களின் தொகுப்பு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களில் இருந்து நடனம் தொகுக்கப்பட்டமை.

- ♦ **தாண்டவத்தின் தோற்றம் -**

    - தண்டு மூலம் பரதருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டமை.

    - சிவனால் ஆடப்பட்டமை.

- ♦ **லாஸ்யத்தின் தோற்றம் -**

    - பார்வதியால் ஆடப்பட்டமை

    - பார்வதி உஷைக்குக் கற்பித்தல்.

    - அப்ஸரஸ்களால் பூமிக்குக் கொண்டு வரப்பட்டமை.

- ♦ மாணவர்களைக் கலந்துரையாடும் போது குறிப்பெடுக்கப்பணித்தல்.
    - விடுபட்ட விடயங்களை விடய உள்ளடக்க அட்டவணையின் உதவியுடன் வழங்கி, நினைவிற்குக் கொண்டுவருதல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாட்டியத் தோற்றம் பற்றி விளக்குவார்.
- நான்கு வேதங்களில் இருந்தும் தொகுக்கப்பட்ட விடயங்களைக் குறிப்பிடுவார்.
- சிவனால் ஆடப்பட்டது தாண்டவம், பார்வதியால் ஆடப்பட்டது லாஸ்யம் என்பதைக் கூறுவார்.
- 5ஆம் வேதமாக நாட்டியம் எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணத்தைக் குறிப்பிடுவார்.

# இரண்டாம் தவணை

தேர்ச்சி 1.0 : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.2 : சமூகச் சடங்குகளில் நடக்கும் கிராமிய நடனங்களை நயந்து வெளிப்படுத்துவார்.

செயற்பாடு 1.2 : கிராமிய நடனங்களான கோலாட்டம், கரகம் ஆகிய நடனங்களை நயந்து வெளிப்படுத்துவோம்.

பாடவேளைகள் : 02

தர உள்ளீடுகள் : கோலாட்டம், கரகம் ஆகிய நடனங்கள் அடங்கிய காணொளி இறுவட்டுக்கள்.

கற்றற் பேறுகள் :

- கிராமிய இசையின் சிறப்பை வெளிப்படுத்துவார்.
- கோலாட்டம், கரகம் ஆகிய நடனங்களை வேறுபடுத்தி அறிந்து கூறுவார்.
- கோல் கொண்டாடுவது கோலாட்டம் என்பதை ஏற்றுக் கொள்வார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

♦ கிராமிய நடனங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

♦ பார்வையிட்ட நடனங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்கள் இரசித்தவற்றை வெளிக்கொணர்தல்.
  - இசை.
  - ஒப்பனை.
  - ஆடல் முறை.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- கிராமிய இசையின் சிறப்பை வெளிப்படுத்துவார்.
- கோலாட்டம், கரகம் ஆகிய நடனங்களை வேறுபடுத்தி அறிவார்.
- கோல் கொண்டாடுவது கோலாட்டம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- கரக நடனம் அம்மனை வேண்டி ஆடப்படுவது என்பதைப் பாடலினூடாகப் புரிந்து கொள்வார்.
- கரகத்தின் ஒப்பனை பற்றி நயந்தவற்றை எடுத்துரைப்பார்.

தேர்ச்சி 2.0 : சூழலிற் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறு வகையான பாடல்களையும் கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 2.2 : அபிநயப்பாடலிற்கு அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

செயற்பாடு 2.2 : மாயங்கள் செய்திட வந்தாண்டி, மந்திரக் காரன்டி அம்மாடி ஆகிய பாடல்களைப் பாடி அபிநயம் அமைத்து அபிநயித்துக் காட்டுவோம்.

பாடவேளைகள் : 04

தரஉள்ளீடுகள் : பாடல்கள் எழுதப்பட்ட அட்டை

கற்றற் பேறுகள் :

- மாயங்கள் செய்திட வந்தாண்டி, மந்திரக் காரன்டி அம்மாடி என்னும் பாடல்களை இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.
- பாடல்களுக்குத் தாமாகவே அபிநயம் அமைத்துக் காட்டுவார்.
- பாடல்களின் பொருளிற்கேற்ப முத்திரைகளைப் பிரயோகிப்பார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- மாயங்கள் செய்திட வந்தாண்டி, மந்திரக் காரன்டி அம்மாடி ஆகிய பாடல்கள் எழுதிய அட்டைகளைக் காட்சிப்படுத்தல்.
- மாணவர்கள் ஏற்கனவே கற்ற அபிநயப் பாடல்கள் தொடர்பான வினாக்களை வினவிக் கலந்துரையாடுதல்.
- ஆசிரியர் பாடலைப் பாட மாணவர் சேர்ந்து பாடுதல்.
- ஆசிரியரும் மாணவரும் இணைந்து இராக தாளத்துடன் முழுமையாகப் பாடுதல்.
- மாணவரைக் குழுவாகவும், தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- மாணவர்களின் தொகைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்துப் பாடலுக்கு அபிநயம் அமைக்க வழிப்படுத்துதல்.
- மாணவர்களைக் குழுவாக இயங்க விட்டு ஆசிரியர் அவதானித்தல்.
- பாடலின் பொருளிற்கேற்ப முத்திரைகளை அபிநயிக்க நெறிப்படுத்துதல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- மாயங்கள் செய்திட வந்தாண்டி, மந்திரக் காரண்டி அம்மாடி ஆகிய பாடல்களைப் பாடுவார்.
- பாடலுக்கு ஏற்ப அபிநயம் செய்து காட்டுவார்.
- பாடல்களின் பொருள் கூறுவார்.
- இரு பாடல்களிலும் வரும் கடவுள்களின் வேறுபட்ட குணங்களைக் கூறுவார்.
- பாடல்களின் உள்ளடக்கத்தில் வரும் கதைச் சம்பவங்களை விவரிப்பார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.1 : ஹஸ்த விநியோகங்களையும், பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.1.2 : அர்த்த பதாகம், கர்த்தரீமுகம், மயூரம் ஆகிய விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம்.

பாடவேளைகள் : 03

தர உள்ளீடுகள் : அர்த்தபதாகம், கர்த்தரீமுகம், மயூரம் ஆகிய விநியோகங்கள் அடங்கிய அட்டை

கற்றற் பேறுகள் :

- அர்த்தபதாகம், கர்த்தரீமுகம், மயூரம் ஆகிய விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- மேற்கூறிய விநியோகங்களின் பொருள் கூறுவர்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- பதாகம், திரிபதாக விநியோகத்திற்கு மேற்கொண்ட கற்பித்தற் செயலொழுங்கைப் பின்பற்றவும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- அர்த்தபதாக, கர்த்தரீமுக, மயூர விநியோகங்களினை சரியான உச்சரிப்புடன் அபிநயிப்பார்.
- அவ் விநியோகங்களின் பொருள் கூறுவார்.
- தகுந்த பாவங்களுடன் பொருளுணர்ந்து அபிநயிப்பார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.2 : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.2.2 : தாதெய்தெய்த (1-4) அடவுகளை அபிநயிப்போம்.

பாடவேளைகள் : 05

தரஉள்ளீடுகள் : தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை

கற்றற்பேறுகள் :

- ♦ தாதெய்தெய்த அடவினை அபிநயிப்பார்.
- ♦ அவ்வடவினைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

கற்றற் கற்பித்தல் செயலொழுங்கு

- ♦ தாதெய்தெய்த அடவின் தாள அட்டவணையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ அடவின் சொற்கட்டினைக் கூறிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
    - சாரிகா அடவு என்றும், பரவல் அடவு என்றும் அழைக்கப்படும்.
    - ஆதி தாளத்தில் அமைந்திருக்கும்.
    - 4 அடவுகள் உண்டு.
- ♦ அடவுகளிற்கான கற்றல் கற்பித்தற் செயலொழுங்கைப் பின்பற்றவும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- தாதெய்தெய்த 1-4 வரையான அடவுகளை அபிநயிப்பார்.
- தாதெய்தெய்த அடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- அடவின் மறுபெயர்களைக் கூறுவார்.
- அடவின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- 4 அடவுகளிலும் பிரயோகிக்கும் முத்திரைகளைக் கூறுவார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.4 : நாட்டிய நிகழ்வொன்றினை இராக தாளத்துடன் அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.4 : பூஜா நடனத்தினை அபிநயித்துக் காட்டுவோம்.

பாடவேளைகள் : 03

தரஉள்ளீடுகள் : பூஜா நடனப் பாடல் எழுதப்பட்ட அட்டை, ஒலி, ஒளி நாடா

கற்றற்பேறுகள் :

- பூஜா நடனம் பூஜித்து, வணக்கம் செலுத்தி ஆடப்படும் நடனம் என்பதைக் கூறுவார்.
- பூஜா நடனப் பாடலை இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.
- பூஜா நடனத்தை சாஸ்திரிய முறைப்படி அமைத்து அபிநயித்துக் காட்டுவார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவரின் முன்னறிவை மீட்கவும்.
  - பூஜா என்பதன் விளக்கம்.
  - பூஜிக்கப் பயன்படும் பொருட்கள்.
- ♦ பூஜா நடனப் பாடலை அறிமுகம் செய்தல்.
- ♦ அபிநயப் பயிற்சிகளை வழங்குதல்.
- ♦ பல்வேறு கோலங்களில் அபிநயிக்கச் செய்தல்.
- ♦ முழுமையான சமர்ப்பணம்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பூஜா நடனம் பூஜித்து, வணக்கம் செலுத்தி ஆடப்படும் நடனம் என்பதைக் கூறுவார்.
- பூஜா நடனம், நடன நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் இடம்பெறும் என்பதை ஏற்பார்.
- பூஜா நடனப் பாடலை இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.
- பூஜா நடனத்தை சாஸ்திரிய முறைப்படி அமைத்து அபிநயித்துக் காட்டுவார்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 4.0 | : | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் , எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| தேர்ச்சி மட்டம் | 4.4 | : | பரத நாட்டியம், கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார். |
| செயற்பாடு | 4.4.4 | : | தாண்டவம், லாஸ்யம் ஆகியன பற்றி அறிந்து கொள்வோம். |
| பாடவேளைகள் | | : | 01 |
| தர உள்ளீடுகள் | | : | விடய உள்ளடக்க அட்டை |

கற்றற் பேறுகள் :

- ♦ அடிப்படைத் தாண்டவங்கள் 7 என்பதை ஏற்பார்.
- ♦ லாஸ்யம் நளினமான ஆடல் என்பதை ஏற்பார்.
- ♦ தாண்டவத்திற்கும், லாஸ்யத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்வார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ வீரமும், சினமும் வெளிப்பட வீறுகொண்டு கம்பீரமாகத் தாளலயங்கள் விளங்க ஆடும் சிவபிரானுக்குரிய நடனம் தாண்டவமாகும் எனக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- ♦ நாட்டிய மங்கை தாள - லயங்களுக்கு ஏற்ப அடவுகள், ஜதிகள் ஆகியவற்றைப் பிரயோகம் செய்து தாண்டவத்தை ஆடுவார்.
- ♦ குதித்தல் என்ற சொல்லிலிருந்து கூத்து என்ற சொல் உருவாகியது போன்று தாண்டுதல் என்ற சொல்லிலிருந்து தாண்டவம் தோன்றியிருக்கலாம்.
- ♦ சிவனார் ஆடிய 5 தாண்டவங்களும் ஐந்தொழில்களாகக் குறிக்கப்படுகின்றன.
- ♦ ஐந்தொழில்களில் ஒன்றான காத்தல் இருவகைப்படும்.
  - இதற்கமைய காத்தல் தாண்டவம் இருவகைப்படும்.
  - எனவே ஐந்தொழில் தாண்டவம் ஆறு .
  - ஐந்தொழிலை ஒருங்கே காட்டுகின்ற தாண்டவம் ஒன்றுமாகத் தாண்டவம் ஏழாகும்.

| | |
|---|---|
| 1. படைத்தல் தாண்டவம் | - காளிகா தாண்டவம், முனி தாண்டவம்,<br>திருநெல்வேலி தாமிர சபை. |
| 2. காத்தல் தாண்டவம் (துன்பம்) | - கௌரி தாண்டவம்<br>திருப்புத்தூர் சிற்சபை. |

3. காத்தல் தாண்டவம் (இன்பம்) - மதுரை வெள்ளியம்பலம்.

4. அழித்தல் தாண்டவம் - சம்கார தாண்டவம். (சுடலையில் நள்ளிரவில்).

5. மறைத்தல் தாண்டவம் - திரிபுர தாண்டவம் திருக்குற்றாலச் சித்திர சபை.

6. அருளல் தாண்டவம் - சண்ட தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம். திருவாலங்காட்டு இரத்தின சபை.

7. ஆனந்த தாண்டவம் - சிதம்பரத்திலுள்ள கனகசபை (பொன்னம்பலம்).

♦ லாஸ்யம் என்பது மென்மையான கரண அங்ககாரங்களுடன் சிருங்காரத்தையோ கருணையையோ முக்கிய சுவையாகக் கொண்டது. இந்நடனத்திற்கு முக்கிய தேவதை பார்வதி.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- தாண்டவம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
- 7 தாண்டவங்களையும் ஆடப்பட்ட இடங்களையும் குறிப்பிடுவார்.
- லாஸ்யம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
- லாஸ்யத்திற்கும் தாண்டவத்திற்குமிடையேயுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுவார்.
- தாண்டவம், லாஸ்யம் ஆகியவற்றிற்குரிய தெய்வங்களைக் குறிப்பிடுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் , எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.4 : பரத நாட்டியம், கண்டிய நடனம் ஆகியவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வார்.

செயற்பாடு 4.4.5 : நிருத்த ஹஸ்தங்கள் என்ற பதத்தினை அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 01

தர உள்ளீடுகள் : விடய உள்ளடக்க அட்டை.

கற்றற் பேறுகள் :

- ♦ தற்போது நடைமுறையிலுள்ள ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகளைச் சாராத ஹஸ்தங்கள் நிருத்த ஹஸ்தங்கள் என ஏற்பார்.
- ♦ நிருத்த ஹஸ்தங்களிலும் இணைந்த, இணையாத முத்திரைகள் என்ற வேறுபாடுண்டு என்பதனைக் குறிப்பிடுவார்.
- ♦ கரணம் செய்யும் முறையினைக் குறிப்பிடுவார்.
- ♦ கரணங்களைஆடி முடித்தல் அங்கஹாரம் என ஏற்பார்.

கற்றல்கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ நிருத்த ஹஸ்தங்கள், கரணங்கள், அங்ககாரம் ஆகியன பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ கரணம் என்பது ஒரே அபிநயத்தை முதலில் வலதுகையினால் அபிநயம் செய்து உடனே அதையே இடது கையினாலும் அபிநயம் செய்தல் ஆகும். கையின் அபிநயத்திற்கேற்ப அடிபோடுதலும் இணைந்திருக்கும். அதாவது கையினாலும் வலது காலினாலும் ஒருங்கே முதலில் வலது கையினாலும் காலினாலும் அபிநயம் செய்து மீண்டும் அதையே இடது பக்கத்தினாலும் அபிநயம் செய்ய வேண்டும் என்பதாம். இது 108 வகைப்படும்.
- ♦ சில கரணங்களை இடைவெளியின்றிச் சேர்த்து ஆடி முடித்தல் அங்கஹாரம் எனப்படும். கரணங்கள் என்னும் மணிகளைக் கோர்த்து மாலைபோல் ஆடுவதால் இப் பெயர் ஆயிற்று. ஒரு கருத்தை முழுமையாக வெளிப்படுத்தக் கை, கால்களால் இணைந்து செய்யப்படும் அபிநயங்களின் தொகுப்பு ஆகும்.
- ♦ நிருத்த ஹஸ்தங்கள் கரணங்கள், நிருத்தம் ஆகியவற்றில் அபிநயம் செய்யப்படுபவை. இவை 30 வகைப்படும்.
- ♦ நிருத்த ஹஸ்தத்தில் இணையாதகை, இணைந்தகை என்ற வேற்றுமை உண்டு.
- ♦ நிருத்த ஹஸ்தங்கள் பற்றி நாட்டிய சாஸ்திரம் விரிவாகக் கூறுகின்றது.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- நிருத்த ஹஸ்தத்தினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அதில் காணப்படும் வகைகளை வேறுபடுத்துவார்.
- கரணம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அங்ககாரம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நிருத்த ஹஸ்தங்கள் செய்யப்படும் சந்தர்ப்பங்களையும் அதன் எண்ணிக்கையையும் குறிப்பிடுவார்.
- நிருத்த ஹஸ்தங்கள் பற்றி விரிவாகக் கூறும் நூல் பற்றிக் குறிப்பிடுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.5 : பரத நாட்டிய அடவுகளுக்குரிய தாள அங்க குறியீட்டினை அறிந்து கொள்வார்.

செயற்பாடு 4.5 : தாதெய்தெய்த, தெய்ஹத் தெய்ஹி அடவுகளைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவோம்.

பாடவேளைகள் : 06

தரஉள்ளீடுகள் : தாதெய் தெய்த அடவின் தாள அங்கக் குறியீடு எழுதப்பட்ட அட்டை.

கற்றற்பேறுகள் :

- ♦ தாதெய்தெய்த, தெய்ஹத் தெய்ஹி அடவுகளைக் கொலுப்பித்துக் காட்டுவார்.
- ♦ தாதெய்தெய்த, தெய்ஹத் தெய்ஹி அடவுகளின் தாள அங்கக் குறியீடுகளை எழுதுவார்.
- ♦ தாதெய்தெய்த, அடவின் மறுபெயர்களைக் கூறுவார்.
- ♦ தெய்ஹத்தெய்ஹி அடவின் மறுபெயரைக் கூறுவார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ மாணவர் வகுப்பறையில் ஏற்கனவே செய்முறைப் பகுதியிற் கற்ற தாதெய் தெய்த அடவினை மீட்டல் செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- ♦ இவ்வடவின் சொற்கட்டை ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டிக் கீழ்வரும் விடயங்களை நினைவு படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.
  - • ஆதி தாளத்தின் அங்க அடையாளம் லகு, துருதம், துருதம்
  - • ஆதி தாளத்தின் மொத்த அட்சரம் எட்டு.
  - • லகுவின் செயற்பாடு தட்டு சின்ன விரல், மோதிர விரல், நடுவிரல் என எண்ணுதல்.
  - • ஆதிதாளத்தினை ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டுதலும் மாணவர் அவதானித்துக் கொலுப்பித்தலும்.
- ♦ முதலிற் தாள அங்கங்களுக்குள் அடங்கும் சொற்கட்டுகளை மாத்திரம் எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
- ♦ லகுவில் அடங்கும் சொற்கட்டினை ஆசிரியர் போட்டுக் காட்ட மாணவர் அவதானித்துக் குறிப்பெடுத்தல்.

- ♦ இதே போன்று மத்திம, துரித காலங்களில் சொற்கட்டினை எழுதப் பணித்தல்.
- ♦ மாணவர் சுயமாக எழுத இடமளித்து ஆசிரியர் அவதானித்தல்.
- ♦ பின்தங்கிய மாணவரை அவதானித்து நெறிப்படுத்தல்.
- ♦ இவ்வாறே தெய்ஹத் தெய்ஹி அடவிற்குமான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளவும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பரவல் அடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
- ஆதி தாளத்தின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- லகு, துருதத்தின் செயற்பாடுகளைக் கூறுவார்.
- தாதெய் தெய்த அடவினைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவார்.
- குதித்து மெட்டடவைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.6 : பஞ்ச ஜாதிகளையும் சப்த தாளங்களையும், தாள அங்கங்களையும் அறிந்து கொள்வார்.

செயற்பாடு 4.6.1 : பஞ்ச ஜாதிகளையும் அவற்றின் சொற்கட்டையும் அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 01

தர உள்ளீடுகள் : பஞ்ச ஜாதிகளும் அதன் சொற்கட்டும் எழுதப்பட்ட அட்டை.

கற்றற் பேறுகள் :

- ♦ பஞ்ச என்பதன் எண்ணிக்கையைக் கூறுவார்.
- ♦ பஞ்ச ஜாதிகளின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- ♦ பஞ்ச ஜாதிகளின் சொற்கட்டுக்களைக் கூறுவார்.
- ♦ திஸ்ர, சதுஸ்ர ஜாதிகள் இணைந்து மிஸ்ர ஜாதி உருவாகுவதை ஏற்பார்.
- ♦ கண்ட, சதுஸ்ர ஜாதிகள் இணைந்து சங்கீர்ண ஜாதி உருவாகுவதை ஏற்பார்.
- ♦ பஞ்ச ஜாதிகள் ஒவ்வொன்றினதும் எண்ணிக்கையைக் கூறுவார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ பஞ்ச என்பதன் எண்ணிக்கையை விளக்குவதற்கு பஞ்ச என்பதில் வரும் ஏனைய உதாரணங்களை முன்வைத்தல்.
  (உ+ம்) பஞ்ச கௌவியம், பஞ்ச புராணம்
- ♦ பஞ்ச ஜாதிகள் அவற்றின் சொற்கட்டுகள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ பஞ்ச ஜாதிகளையும் அவற்றின் சொற்கட்டுக்களையும் கூறிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- ♦ திஸ்ர ஜாதி - தகிட.
  சதுஸ்ர ஜாதி - தகதிமி.
  கண்ட ஜாதி - தகதகிட.
  மிஸ்ர ஜாதி - தகிட தகதிமி.
  சங்கீர்ண ஜாதி - தகதிமி தக தகிட.
- ♦ திஸ்ர, சதுஸ்ர ஜாதிகள் இணைந்து மிஸ்ர ஜாதி உருவாதல்.
- ♦ கண்ட, சதுஸ்ர ஜாதிகள் இணைந்து சங்கீர்ண ஜாதி உருவாதல்.

♦ கலந்துரையாடலின் பின் மாணவரைக் குறிப்பெடுக்க வழிகாட்டி, இடர்ப்படும் போது மாணவருக்கு உதவுதல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பஞ்ச என்பதன் எண்ணிக்கையை உதாரணங்களுடன் கூறுவார்.
- பஞ்ச ஜாதிகளைக் கூறுவார்.
- பஞ்ச ஜாதிகளின் சொற்கட்டுக்களைக் கூறுவார்.
- திஸ்ர, சதுஸ்ர ஜாதிகள் இணைந்து மிஸ்ர ஜாதி உருவாகுவதை விளக்குவார்.
- சதுஸ்ர,கண்ட ஜாதிகள் இணைந்து சங்கீர்ண ஜாதி உருவாகுவதை விளக்குவர்.
- பஞ்ச ஜாதிகள் ஒவ்வொன்றினதும் எண்ணிக்கையைக் கூறுவார்.

தேர்ச்சி 5.0 : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 5.2 : இலங்கையின் பிரதேசவாரியான கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார்.

செயற்பாடு 5.2 : காமன் கூத்தின் கலாசாரப் பின்னணியை அறிவோம்.

பாடவேளைகள் : 04

தரஉள்ளீடுகள் : காமன் கூத்தின் ஒளிப்படங்கள்.

கற்றற் பேறுகள் :

- காமன் கூத்துக்கான ஐதிகக் கதைப் பின்னணியை விபரிப்பார்.
- காமன் கூத்துக்களைப் பழகுபவர் காமன் மாஸ்டர் என்பதைக் குறிப்பிடுவார்.
- காமன் கூத்தின் ஆடை அணிகலன் ஒப்பனைகள் பற்றிக் குறிப்பிடுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

♦ மாணவர்கள் அறிந்துள்ள கூத்துக்கள் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களைக் கலந்துரையாடுதல்.

♦ ஏற்கனவே அறிந்த விடயங்களுடன் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

  - காமன் கூத்தின் தோற்றம்.
  - காமன் கூத்தின் ஐதிகக் கதை.
  - காமன் கூத்தின் பக்கவாத்தியம்.
  - காமன் கூத்தின் ஒப்பனை.

♦ கலந்துரையாடலை மேற்கொள்ளும் போது குறிப்புகள் எடுக்கும்படி வலியுறுத்தல்.

♦ விடய உள்ளடக்க அட்டையைப் பார்வையிட்டு விடுபட்ட குறிப்புகளை இணைத்துக் கொள்ளும்படி வலியுறுத்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- காமன் கூத்து இலங்கையில் பரவியமையை விவரிப்பார்..
- காமன் கூத்தின் ஐதிகக் கதையைக் கூறுவார்.
- காமன் கூத்தின் பக்கவாத்தியங்களைக் குறிப்பிடுவார்.
- காமன் கூத்தின் ஒப்பனை பற்றிக் கூறுவார்.
- காமன் கூத்தினைப் பழக்கி மேடையேற்றுபவரின் பெயரினைக்

குறிப்பிடுவார்.

## காமன் கூத்து

ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இலங்கையின் மத்திய பகுதியாகிய மலை நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் தொழிலில் ஈடுபடுவதற்கு இலங்கையர் ஒருவரும் முன்வராத போது இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளர்களை அழைத்து வந்தனர். அப்படி வந்தவர்களில் கிராமியக் கலைகளில் வல்ல இசைக் கலைஞர்கள் ஆடல், கூத்து கலைஞர்களும் வந்திருந்தனர். இந்தியாவில் தாம் ஆடியும், பாடியும் வந்த கலைகளை இலங்கையிலும் ஆடிப்பாடிப் பரப்பத் தொடங்கினர். அவ்வாறு வந்த கலைகளில் ஒன்றே காமன் கூத்து ஆகும். காமன் கூத்து மலைகயத்தில் ஆடப்பட்டு வருகிறது.

இக் கூத்து இரவு 7மணி தொடக்கம் விடியும் வரை ஆடப்படும். காமன் கூத்துக் கதையின்படி சிவன் தக்கனது தவத்தை அழித்த பின்னர் பெருங்கோபத்தோடு இமயமலையில் தவமிருக்கின்றார். அதனாற் தேவலோகம் அனலால் அவதியுறுகிறது. இந்நிலையில் தேவர்கள் என்ன செய்வதென்று தவிக்கையில் இந்திரன் சிவனுடைய தவத்தையழிக்கச் செல்லும்படி மன்மதனுக்குத் தூதோலை அனுப்புகின்றான். மன்மதன் இந்திரன் கட்டளையை ஏற்றுச் சிவனின் தவத்தையழிக்கச் சென்று மடிகிறான். பின்பு ரதி சிவனிடம் இரந்து வேண்ட மாறன் (மன்மதன்) உயிர் பெறுகின்றான்.

இக்கூத்தைப் பயிற்றுவிப்பதில் காமன் மாஸ்டர் முக்கிய இடம் பெறுகிறார். இவருக்கருகே பக்கப்பாட்டுக் காரர்களும் பக்க வாத்தியக்காரர்களுமிருப்பர். இதன் பக்கவாத்தியம் தப்பு ஆகும். காமன் கூத்து ஆடலும் பாடலும் நிறைந்த ஒரு கலை வடிவமாகும். காமன் கூத்தாட்டம் எளிமையானது. வடமோடி, தென்மோடி ஆட்டம் போல ஆட்ட நுணுக்கங்களை இது கொண்டிருக்கவில்லை. முகப்பூச்சிற்கு அரிதாரம் பயன்படுத்தப்படும். அழகிய சரிகைத் துணிகளினாலான உடைகளை மன்மதன், ரதி ஆகியோர் அணிவர். அழகிய புஜக்கிரீடம், மணிமுடி, மணிமாலைகள், முத்துமாலைகள் என்பவற்றைப் பூணுவர். கழுத்திற் பல வகையான மாலைகளை அணிந்து அழகுபடுத்துவர்.

# மூன்றாம் தவணை

தேர்ச்சி 1.0 : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.3 : அபிநயப் பாடல், தனிநபர் அபிநயம், ஆரம்பக்கல்வியில் பயின்ற பாடல்களை நயந்து வெளிப்படுத்துவார்.

செயற்பாடு 1.3 : அபிநயப் பாடலில் நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

பாடவேளைகள் : 05

தர உள்ளீடுகள் : அபிநயப் பாடல் அடங்கிய காணொளி இறுவட்டு.

கற்றற்பேறுகள் :

- பாடலிற்கு அபிநயிப்பார்.
- அபிநயப் பாடலைப் பாடிக்காட்டுவார்.
- பயன்படுத்தப்பட்ட முத்திரைகளைக் கூறுவார்.
- அபிநயப் பாடலில் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ அபிநயப் பாடல் சம்பந்தமான காணொளி, இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ ஆசிரியர் அபிநயப் பாடல் ஒன்றினைப் பாடி அபிநயித்தல்.
- ♦ காணொளி, இறுவட்டிலும் நேரடியாகவும் பார்வையிட்ட அபிநயப் பாடலில் இருந்தும் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.
    - பாடலின் பொருள்.
    - அபிநயம்.
    - முத்திரைப் பயன்பாடு.
    - பாடலில் வரும் கதைச் சம்பவங்கள்

கணிப்பீடும் மதிப்பீடும் :

- அபிநயப் பாடலில் வரும் கதைச் சம்பவங்களை விவரிப்பார்.
- தாம் அபிநயித்தவற்றில் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.
- அபிநயப் பாடலைப் பாடுவார்.
- அபிநயப் பாடலுக்கு அபிநயிப்பார்.
- பாடலில் பயன்படுத்தப்பட்ட முத்திரைகளைக் குறிப்பிடுவார்.

தேர்ச்சி 2.0 : சூழலிற் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 2.3 : வெவ்வேறு வகையான கிராமியப் பாடல்களுக்குத் தாமே நடனம் அமைத்துக், கொலுப்பித்து அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 2.3. : கோலாட்டம் என்னும் கிராமிய நடனத்திற்கு நடனம் அமைத்து அபிநயிப்போம்.

பாடவேளைகள் : 04

தர உள்ளீடுகள் : கோலாட்டப் பாடல் அடங்கிய இறுவட்டு, பாடல் எழுதப்பட்ட அட்டை.

கற்றற் பேறுகள் :

- கோலாட்டப் பாடலினை இராகத்துடன் பாடுவார்.
- பல்வேறு கோலங்களில் ஆடற் கோலங்களை அமைப்பார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- கோலாடுவோம் நாமும் பண்பாடுவோம் என்ற கோலாட்டப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- குறித்த பாடல் அடங்கிய இறுவட்டினை ஒலிக்கச் செய்து அவதானிக்கச் செய்தல்.
  - பாடலை ஆசிரியர் பாட மாணவர் செவிமடுத்தல்.
  - ஆசிரியர் பாடலைப் பாட மாணவர்கள் சேர்ந்து பாடுதல்.
  - ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து முழுமையாகப் பாடுதல்.
  - மாணவர்களின் தொகைக்கேற்பக் குழுக்களைப் பிரித்துப் பாடலைப் பாடியவாறு கோலாட்ட நடனத்தை ஆக்க வழிப்படுத்தல்.
  - பல்வேறு கோலங்களில் கோலாட்டக் கோல்களைத் தாங்கி ஆடலை அமைக்க வழிகாட்டல்.
  - குழுவாக ஆடலில் ஈடுபடும் போது மற்றைய குழு அவதானித்துக் கருத்துக் கூறுதல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாடலை இசையுடன் பாடுவார்.
- பாடலினைப் பாடியவாறு கோலாட்ட நடனத்தினை ஆற்றுகைப் படுத்துவார்.
- பல்வேறு கோலங்களில் ஆடுவார்.
- கோல்களைத் தகுந்த முறையில் கையாள்வார்.
- குழுவினரை ஆக்க பூர்வமாக விமர்சிப்பார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.1 : ஹஸ்த விநியோகங்களையும், பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.1.3 : அர்த்தசந்திரன், அராளம், சுகதுண்ட விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவோம்.

பாடவேளைகள் : 02

தர உள்ளீடுகள் : அர்த்தசந்திரன், அராளம், சுகதுண்ட விநியோகங்கள் அடங்கிய அட்டைகள்.

கற்றற் பேறுகள் :

- ♦ அர்த்தசந்திர, அராள, சுகதுண்ட விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ அவற்றின் பொருள் கூறுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ ஏற்கனவே விநியோகத்திற்கு மேற்கொண்ட கற்றல்- கற்பித்தற் செயலொழுங்கை மேற்கொள்ளவும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- அர்த்த சந்திர, அராள, சுகதுண்ட விநியோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- விநியோகங்களை சரியான உச்சரிப்புடன் வெளிப்படுத்துவார்.
- விநியோகங்களின் பொருள் கூறுவார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.2 : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.2.3 : தெய்ஹத் தெய்ஹி அடவினைக் கற்போம்.

பாடவேளைகள் : 03

தரஉள்ளீடுகள் : தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை, அடவை விளக்கும் படங்கள்.

கற்றற் பேறுகள் :

- ♦ தெய்ஹத் தெய்ஹி அடவின் மறுபெயர் குதித்து மெட்டடவு என்பதைக் கூறுவார்.
- ♦ குதித்து மெட்டடவினை அங்க சுத்தத்துடன் அபிநயிப்பார்.
- ♦ இவ்வடவினைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ குதித்தல், மெட்டுதல் என்றால் என்ன என்பது தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடி அவற்றைச் செய்து காட்டும்படி கூறுதல்.

- ♦ பாதங்களைக் குதித்து மெட்டிச் செய்வதாற் குதித்து மெட்டடவு எனப் பெயர் பெற்றது என்பதை ஏற்பார்.

- ♦ குதித்து மெட்டடவின் பாதநிலை, அங்க நிலை, சொற்கட்டு, தாளம் போன்றவை பற்றிக் கலந்துரையாடுதல்.

- ♦ தெய்ஹத் தெய்ஹி அடவின் மறுபெயர் குதித்து மெட்டடவு.

- ♦ அடவுகளுக்கான கற்பித்தற் செயலொழுங்கை இங்கே மேற்கொள்ளவும்.

குறிப்பு- குதிக்கும் போது உள்ளங்கால்கள் இரண்டும் சமாந்தரமாக ஒன்றையொன்று பார்ப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- குதித்து மெட்டுதல் பற்றிய விளக்கத்தினைக் கூறுவார்.

- தெய்ஹத் தெய்ஹி அடவின் மறுபெயர் குதித்து மெட்டடவு என்பதைக் கூறுவார்.

- குதித்து மெட்டடவு 1-4 இனை அபிநயிப்பார்.

- குதித்து மெட்டடவினைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

- குதித்து மெட்டடவு என்ற பெயர் வந்த காரணத்தைக் கூறுவார்.

தேர்ச்சி 3.0 : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.3 : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை அபிநயித்துக் காட்டுவார்.

செயற்பாடு 3.3 : கிராமிய நடனமாகிய காவடி நடனத்தை ஆடுவோம்.

பாடவேளைகள் : 03

தரஉள்ளீடுகள் : காவடி நடனம் அடங்கிய காணொளி இறுவட்டு, காவடிப்பாடல் எழுதப்பட்ட அட்டை, மாதிரிக் காவடி.

கற்றல் பேறுகள் :

- ♦ பல்வேறுவகையான காவடிகள் பற்றிக் கூறுவார்.
- ♦ காவடி நடனம் முருகனை வேண்டி ஆடப்படுகின்றது என்பதைக் கூறுவார்.
- ♦ காவடி நடனப் பாடலை இசையுடன் பாடுவார்.
- ♦ கிராமியப் பாதச் சுவடுகளுடன் காவடி நடனத்தை அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ தற்காலத்தில் முருகன் கோவில்களில் மாத்திரமன்றி ஏனைய கோவில்களிலும் நேர்த்திக்காகக் காவடி எடுக்கப்படுவதை ஏற்பார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ மாணவர்களின் அனுபவங்களினூடாகக் காவடி நடனம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ காவடி நடனத்தைக் காணொளி, இறுவட்டினூடாகக் காட்சிப்படுத்துதல்.
- ♦ காவடிப் பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ பாடலைப் பார்த்த, கேட்ட அனுபவங்களைப் பற்றிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- ♦ பாடலை ஆசிரியர் பாடிக் காட்டுதலும் மாணவர் அவதானித்துப் பாடுதலும்.
- ♦ ஆசிரியர் காவடி நடனத்தினைக் கிராமியச் சுவடுகளிற் செய்து காட்டுதலும் மாணவர் பின்பற்றி அபிநயித்தலும்.
- ♦ மாணவர்களும், ஆசிரியரும் சேர்ந்து பாடி அபிநயித்தல்.
- ♦ பல்வேறு கோலங்களில் ஆடி நிறைவு செய்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- காவடி நடனத்தைப் பல்வேறு கோலங்களில் அபிநயிப்பார்.
- காவடிப் பாடலைப் பாடிக் காட்டுவார்.
- காவடி நடனம் ஆடப்படுவதன் நோக்கத்தைக் கூறுவார்.
- பல்வேறு வகையான காவடிகள் பற்றிக் கூறுவார்.
- காவடியைத் தோளில் தாங்கி ஆடலை மேற்கொண்டு காட்டுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.3 : தாளங்ளை விளங்கிக் கொள்வார்.

செயற்பாடு 4.3 : ஆதி, ரூபக தாளங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 02

தரஉள்ளீடுகள் : சப்த தாளங்களும், அதன் அங்கங்களும் எழுதப்பட்ட அட்டைகள்.

கற்றல் பேறுகள் :

- ஆதி, ரூபக தாளங்களின் அட்சர எண்ணிக்கைகளைக் குறிப்பிடுவார்.
- ஒரு அட்சரத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கைகளைக் குறிப்பிடுவார்.
- தாள அங்கக் குறியீடுகளை விளங்கிக் கொள்வார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ சப்த தாளங்களையும் அதன் அங்கங்கள் எழுதப்பட்ட அட்டையையும் காட்சிப்படுத்துங்கள்.
- ♦ ஏற்கனவே கற்ற ஆதி, ரூபக தாளங்களின் குறியீடுகளைச் சப்த தாள அட்டவணையில் இனங்காண வழிப்படுத்தல்.
- ♦ ஆதி தாளத்தின் மறுபெயர் சதுஸ்ர ஜாதி திரிபுடை தாளம்.
- ♦ ஆதி தாளத்தின் அட்சர எண்ணிக்கை 8, ரூபக தாளத்தின் அட்சர எண்ணிக்கை 6.
- ♦ ஒரு அட்சரத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 4
- ♦ ஆகவே ஆதி தாளத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 32, ரூபக தாளத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை 24.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- சப்த தாளங்களைக் கூறுவார்.
- ஆதி தாளத்தின் மறுபெயர் திரிபுடை தாளம் என்பதைக் கூறுவார்.
- ஆதி, ரூபக தாளங்களின் அட்சர எண்ணிக்கைகளைக் கூறுவார்.
- ஒரு அட்சரத்தில் அடங்கியுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கைகளைக் கூறுவார்.
- தாள அங்கக் குறியீடுகளை விளங்கிக் கொள்வார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.6 : பஞ்ச ஜாதிகளையும் சப்த தாளங்ளையும் தாள அங்கங்களையும் அறிந்து கொள்வார்.

செயற்பாடு 4.6.2 : சப்த தாளங்களையும் அதன் தாள அங்கங்களையும் அறிந்து கொள்வோம்.

பாடவேளை : 03

தரஉள்ளீடுகள் : சப்த தாளங்களும் அதன் அங்கங்களும் எழுதப்பட்ட அட்டைகள்.

கற்றல் பேறுகள் :

- ♦ சப்த தாளங்களைக் குறிப்பிடுவார்.
- ♦ சப்த தாளங்களின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- ♦ ஆதி தாளத்தின் மறு பெயர் சதுஸ்ர ஜாதி திரிபுடை தாளம் என்பதை ஏற்பார்.

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ மாணவர்கள் அறிந்து வைத்துள்ள தாளங்களையும் அதன் இசைக் குறியீடுகளையும் பற்றிக் கலந்துரையாடுதல்.

- ♦ சப்த தாளங்களையும் அதன் அங்கங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.

- ♦
    - துருவ தாளம் 1011
    - மட்டிய தாளம் 101
    - ரூபக தாளம் 01
    - ஜம்பை தாளம் 1∪0
    - திரிபுடை தாளம் 100
    - அட தாளம் 1100
    - ஏக தாளம் 1

- ♦ ஏற்கனவே கற்ற ஆதி, ரூபக தாளங்களின் குறியீடுகளைச் சப்த தாள அட்டவணையில் இனங்காண வழிப்படுத்தல்.

- ♦ ஆதி தாளத்தின் மறுபெயர் சதுஸ்ர ஜாதி திரிபுடை தாளம் என்பதைக் கூறுவார்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- சப்த தாளங்களைக் கூறுவார்.
- சப்த தாளங்களின் தாள அங்கங்களைக் கூறுவார்.
- ஆதி தாளத்தின் மறுபெயர் திரிபுடை தாளம் என்பதைக் கூறுவார்.
- கூடிய அட்சரங்களைக் கொண்ட தாளத்தை இனங்கண்டு கூறுவார்.
- ஒரு அங்கத்தை உடைய தாளத்தை இனங்கண்டு கூறுவார்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.7 : புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தினையும் கருத்தினையும் கூறுவார்.

செயற்பாடு 4.7 : புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தையும் அதன் கருத்தையும் அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 03

தர உள்ளீடுகள் : புஷ்பாஞ்சலியின் ஸ்லோகமும் கருத்தும் எழுதப்பட்ட அட்டை.

<u>கற்றற் பேறுகள் :</u>

- ♦ புஷ்பம்+அஞ்சலி என்பதன் பொருளைக் குறிப்பிடுவார்.
- ♦ புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தை எழுதிக் காட்டுவார்.
- ♦ புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தின் பொருளை விளக்கிக் கூறுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ புஷ்பம்+அஞ்சலி என்பதன் பொருளைக் கலந்துரையாடுதல்.
- ♦ புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தையும் அதன் கருத்தையும் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தைத் தெளிவாக உச்சரிக்க வழிநடத்துதல்.
- ♦ ஸ்லோகத்தின் பொருளை தெளிவாக விளங்கிக் கொள்ள வழிகாட்டல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- புஷ்பாஞ்சலி என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- புஷ்பாஞ்சலி செய்யப்படும் சந்தர்ப்பத்தினைக் கூறுவார்.
- புஷ்பாஞ்சலியின் ஸ்லோகத்தைக் கூறுவார்.
- புஷ்பாஞ்சலியின் பொருளைக் கூறுவார்.
- ஸ்லோகம் வடமொழியில் அமைந்துள்ளதைக் கூறுவார்.

தேர்ச்சி 5.0 : நடனங்களின் கலாச்சாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 5.3 : கிராமிய நடனங்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு 5.3.1 : கரகம் பற்றி அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 03

தரஉள்ளீடுகள் : கரக நடனம் சம்பந்தமான படங்கள்.

கற்றல் பேறுகள் :

- ♦ கரகம் கிராமிய நடன வகையைச் சார்ந்ததுஎன்பதைக் கூறுவார்.
- ♦ மாரியம்மனை வேண்டி ஆடப்படும் நடனம் என்பதைக் குறிப்பிடுவார்.
- ♦ அம்மைநோய் வந்த போது கரகமாடி நோய் தீர்த்தனர் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ♦ கரகத்திற்கும் பயன்படுத்தப்படும் பக்க வாத்தியத்தினைக் குறிப்பிடுவார்.
- ♦ ஆடை அணிகலன்களைக் குறிப்பிடுவார்.

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

- ♦ கிராமிய நடனங்களில் ஒன்றான கரகம் பற்றி மாணவர்கள் அறிந்துள்ளவற்றை வெளிக்கொணர்வார்..
- ♦ கரக நடனம் சம்பந்தமாக எழுதப்பட்ட அட்டையைக் காட்சிபடுத்தி பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
    - கரக நடனத்தின் தோற்றம்.
    - கரகம் மாரியம்மனை வேண்டி ஆடப்படும் நடனம்.
    - கரக நடனத்திற்குப் பாவிக்கப்படும் இசைக்கருவிகள்.
    - நோய் தீர்க்க வேண்டி ஆடப்படும் நடனம்.
    - அம்மை நோய் ஏற்பட்ட போது பெரும்பாலும் ஆடப்பட்டது.
    - வேப்பிலைக்கும் அம்மை நோய்க்குமுள்ள தொடர்பு.
- ♦ கலந்துரையாடலின் போது மாணவர்களைக் குறிப்பெடுக்கப் பணித்தல்.
- ♦ விடுபட்ட விடயங்களை ஆசிரியர் அவதானித்து நெறிப்படுத்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- கரக நடனத்தின் தோற்றம் பற்றிக் கூறுவார்.
- கரக நடனத்தில் பாவிக்கப்படும் இசைக்கருவிகள் பற்றிக் கூறுவார்.
- கரக நடனத்திற்கு அணியப்படும் ஆடை, ஆபரணங்களைக் கூறுவார்.
- கரக நடனம் ஆடப்படும் சந்தர்ப்பத்தினைக் கூறுவார்.
- வேண்டி ஆடப்படும் தெய்வத்தினைக் குறிப்பிடுவார்.
- கரக நடனத்திற்கும் நோய் தீர்த்தலுக்கமான தொடர்பை விவரிப்பார்.

தேர்ச்சி 5.0 : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 5.3 : கிராமிய நடனங்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு 5.3.2 : காவடி பற்றி அறிந்து கொள்வோம்.

பாடவேளைகள் : 03

தரஉள்ளீடுகள் : காவடி நடனம் சம்பந்தமான எழுதப்பட்ட அட்டை.

கற்றல் பேறுகள் :

- ♦ காவடி நடனம் கிராமிய வகையைச் சார்ந்தது என்பதைக் கூறுவார்.
- ♦ காவடி முருகனை வேண்டி ஆடப்படும் என்பதைக் கூறுவார்.
- ♦ காவடி தோன்றிய வரலாற்றை விவரிப்பார்.
- ♦ காவடி நடனத்திற்குப் பாவிக்கப்படும் இசைக்கருவி பற்றிக் குறிப்பிடுவார்.
- ♦ காவடியின் வகைகளைக் குறிப்பிடுவார்.

கற்றல்கற்பித்தற் செயலொழுங்கு :

- ♦ கிராமிய நடனங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுதல்.

- ♦ காவடி நடனத்திற் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் மாணவருடன் கலந்துரையாடுதலை மேற்கொள்ளுதல்.
    - கிராமிய வகையைச் சார்ந்தவை.
    - வேண்டுதலின் பேரில் ஆடப்படும் நடனம்.
    - ஆரம்பத்தில் நேர்த்திப் பொருள்களை நீண்ட தடியின் இரு மருங்கிலும் காவிச்செல்லல்.
    - காவடி நடனங்களின் வகைகளைக் கூறுதல்.
    - காவடி நடனத்திற்குப் பாவிக்கப்படும் இசைக் கருவிகள்.
    - காவடி நடனத்திற்கு அணியப்படும் ஆடை, ஆபரணங்கள்.

- ♦ ஆசிரியர் கலந்துரையாடும் போது மாணவரைக் குறிப்பெடுக்கப் வழிகாட்டுதல்.

- ♦ குறிப்பெடுக்கும் போது இடர்படும் மாணவரை அவதானித்து நெறிப்படுத்தல்.

கணிப்பீடும் மதிப்பீடும் :

- காவடி நடனம் தோன்றிய வரலாற்றை விளக்குவார்.
- காவடி நடனத்திற்குப் பாவிக்கப்படும் இசைக்கருவிகள் பற்றிக் கூறுவார்.
- காவடி நடனத்தின் வகைகளைக் கூறுவார்.
- காவடி நடனம் ஆடப்படும் சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுவார்.
- வேண்டி ஆடப்படும் தெய்வத்தினைக் குறிப்பிடுவார்.